இனிமையான குழந்தைகளே! நீங்கள் ஆன்மீகப் போர் வீரர்கள், உங்களுக்கு பாபாவிடமிருந்து மிகப் பெரிய ஞானத்தின் குண்டு கிடைத்திருக்கின்றது. இதன் மூலம் மாயா எதிரியை வெற்றி அடைகிறீர்கள்.

கேள்வி: எந்த ரகசியத்தைப் புரிந்து கொள்வதால் நீங்கள் கவலையற்ற சக்கரவர்த்தி ஆகி விடுகிறீர்கள்?

பதில்: முழு நாடகத்தின் ரகசியத்தைப் புரிந்து கொள்வதால் கவலையற்ற சக்கரவர்த்தி ஆகியிருக் கிறீர்கள். நாம் பழைய கணக்கு வழக்குகளை முடித்துவிட்டு 21 பிறவிகளுக்கு ஞானம் யோகத்தினால் தங்களின் பையை நிரப்பிக்கொண்டு இருக்கின்றோம் என உங்களுக்குத் தெரியும். நாம் சிவபாபாவின் பேரக் குழந்தைகள், பிரம்மா பாபாவின் குழந்தைகள்... என்றால் எந்த விஷயத்தைப் பற்றி கவலைப்பட வேண்டும்.

பாடல்: அதிர்ஷ்டத்தை எழுப்பி வந்திருக்கின்றேன் .....

ஓம் சாந்தி. என்னுடைய செல்லமான குழந்தைகளே! நீங்கள் குப்த (ரகசிய) படையினர். மேலும் குழந்தை களாகிய உங்களுக்கு ஞானத்தின் வெடி குண்டுகள், பெரிய பெரிய ஞானத்தின் குண்டுகள் கிடைத்துக் கொண்டு இருக்கின்றன என பாபா புரிய வைக்கின்றார். இது அதே கீதையின் பாகம், நாடகத்தின் பாகம் மீண்டும் சென்று கொண்டு இருக்கின்றது என நீங்கள் அறிகிறீர்கள். ஒரு கீதா சாஸ்திரத்தினுடன் தான் மகாபாரதப் போரின் தொடர்பு இருக்கின்றது. குழந்தைகளாகிய நீங்கள் குப்த படையினர். அந்த மக்கள் இன்னும் குண்டுகள் சக்தி வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி செய்து கொண்டு இருக்கின்றார்கள். அது போன்று சிவபாபாவும் பிரம்மா மூலமாக உங்களுக்கு ஞானத்தின் குண்டுகளை கொடுத்துக் கொண்டு இருக்கிறேன் என கூறுகின்றார். எனவே நீங்கள் மனிதர்களுக்கு மீண்டும் கீதையின் பாகம் நடந்து கொண்டு இருக்கின்றது, என நன்றாக சங்கொ- எழுப்பி கூறுங்கள். சொர்க்கத்தின் இராஜ்யம் உருவாகிக் கொண்டு இருக்கின்றது. இராஜா இராணிக் காக அந்த படையினர் உழைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் உங்களுக்காக மாயையை வெற்றி அடைந்து 21 பிறவிகளுக்கு இராஜ்ய பாக்கியத்தை 5000 வருடத்திற்கு முன்பு போலவே எடுக்கின்றீர்கள். உண்மையில் நம்முடைய அதிர்ஷ்டத்தை உருவாக்கிக் கொண்டு இருக்கின்றோம் என்பது உங்களுடைய புத்தியில் இருக்கின்றது. அவர்கள் அல்ப காலத்திற்காக பெரிய வருமானத்தை அடைகிறார்கள். இங்கே நீங்கள் உங்களுக்காக 21 பிறவிகளுக்காக பிராப்தியை உருவாக்குகிறீர்கள். நீங்கள் மம்மா பாபாவை விட மேலே செல்ல முடியும். ஆனால் மம்மா பாபாவை விட மேலே செல்ல முடியாது. விவேகம் சொல்கின்றது. சூரியன் சந்திரனுக்கு கிரகணம் பிடிக்கலாம். ஆனால் உடைக்க முடியாது. நட்சத்திரங்கள் உடைந்து விடுகின்றன. என்னுடைய செல்லமான குழந்தைகளே நான் குழந்தைகளாகிய உங்களை ஏன் நினைக்க மாட்டேன்? இப்படிப்பட்ட செல்லமான குழந்தைகள் நினைவிற்கு வரமாட்டார்களா என்று பாபா கூறுகின்றார். ஆனால் குழந்தைகள் பாபாவை நினைவு செய்வதை மறந்து விடுகிறார்கள் என அனுபவம் கூறுகின்றது. குழந்தைகள் தன்னை மணப்பெண் என்று நினைப்பதை விட குழந்தை என புரிந்து கொண்டால் அதிகமாக சக்தி கிடைக்கும். ஏனென்றால் மனைவி

மணவாளனோடு ஆஃப் பார்ட்னர் (பாதி பங்குதாரர்) ஆவார். குழந்தைகள் முழு வாரிசு ஆகி விடுகிறார்கள். ஆகவே தான் பாபா எனக்கு ஞானி ஆத்மாக்களின் மீது அன்பு இருக்கின்றது என்கிறார். தியானம் செய்பவர் களுக்கு சாட்சாத்காரத்தின் மீது ஆசை இருக்கின்றது. யார் பாபா என்கிறார்களோ அவர்கள் ஞானி ஆத்மாக்கள் என்கிறார்கள். பாபாவிற்கு ஞானத்தின் மீது அன்பு இருக்கின்றது. இப்போது உங்களுக்கு ஞானத்தின் குண்டுகள் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. புது விஷயம் அல்லவா? தியானத்தில் நிறைய காட்சிகளைப் பார்க்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு ஞானம் எதுவும் கிடைப்பதில்லை. பாபா தியானம் முக்கியமில்லை என்றும் கூறவில்லை. பக்தி மார்க்கத்தில் காட்சிகள் கிடைக்கின்றது என்றால், குஷி அடைகிறார்கள். ஆனால் முக்திதாமத்திற்குப் போக முடியாது. நீங்கள் என்னுடைய தாமத்திற்கு வரக்கூடியவர்கள் என்று பாபா கூறுகின்றார். இந்த ஞானத்தினால் நாம் எதிர்காலத்தில் இளவரசனாக மாறுவோம் என நீங்கள் அறிகிறீர்கள். இந்த கண்களால் பார்ப்பதற்கு தேவதைகள் இங்கு இல்லை. சித்திரங்கள் இருக்கின்றது அல்லவா? கிருஷ்ணரை நீங்கள் பார்க்கின்றீர்கள். அங்கே இளவரசன் இளவரசியின் நடனம் நடக்கின்றது. தவிர பால லீலையும் காண்பிக்கிறார்கள். எப்போது மகாராணி ஆவார்கள், எப்போது அந்த இளவரசன் கிடை ப்பார்? என்பது தெரியவில்லை. நாம் எதிர்காலத்திற்காக மகாராணி ஆகிக் கொண்டு இருக்கின்றோம் என்ற நிச்சயம் ஏற்பட வேண்டும் என்பதற்காக சாட்சாத்காரம் செய்விக்கின்றார். அங்கு நம்முடைய ஆத்மா மற்றும் உடல் இரண்டும் தூய்மையாக இருக்கும் என ஞானத்தினால் புரிந்து கொள்ள முடியும். இந்த நானே அது! என்ற மந்திரம் இச்சமயத்தினுடையதாகும். சிவபாபாவை நினைப்பதால் சக்தி கிடைக்கிறது. வாயில் கூழாங்கற்களைப் போடும் விளையாட்டை காண்பிக்கிறார்கள். வாயில் கூழாங் கற்களைப் போட்டதும் மாயை பறந்து விடுகிறது. செல்லமான குழந்தைகளே ! அனைத்து வேலைகளையும் செய்யுங்கள். புத்தியில் பாபாவை மட்டும் நினையுங்கள் என்று பாபாவே கூறுகின்றார். உங்களுடையது ஒரு பரந்தாமம் ஆகும். அவர்கள் யாத்திரைக்கு செல்கிறார்கள் என்றால் மிகவும் சுற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். நான்கு தாமங்களும் புத்தியில் இருக்கும். உங்களுடைய புத்தியில் ஒரே ஒரு பரந்தாமம் மட்டுமே இருக்கின்றது. நீங்கள் என்ன விரும்பு கின்றீர்கள் என்று யாரிடம் வேண்டுமானாலும் கேட்டுப் பாருங்கள். முக்தி என்பார்கள். சந்நியாசி கூட அமைதிக்காக வீடு வாசலைத் துறக்கிறார்கள். காட்டுக்குப் போகிறார்கள். நான் பிறப்பு இறப்பில் இருந்து விடுபட வேண்டும், மோட்சம் பெற வேண்டும் என நினைக்கிறார்கள். சதா காலத்திற்காக யாரும் விடுபட முடியாது. இது ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட நாடகம் ஆகும். இந்த நாடகத்தின் ரகசியத்தை யாரும் அறியவில்லை. படைக்கக்கூடியவர் டைரக்டர் முக்கியமான நடிகரை அறிய வில்லை. இந்த நாடகத்தில் முழுமையாக நான்கு பாகங்கள் இருக்கின்றது என உங்களுக்குத் தெரியும். சத்தியுகத்தின் ஆயுள் நீண்டது கிடையாது. ஜெகன்நாத் புரியில் சாதத்தின் பானையைப் படைக் கிறார்கள் என்றால், அது முழுமையாக நான்கு பாகங்கள் ஆகின்றது. இந்த உலகமோ நான்கு பாகங்களின் டிராமா ஆகும். அதனுடைய முதல், இடை, கடையை நீங்கள் அறிகிறீர்கள். இது விளையாட்டு ஆகும். நாம் தான் தேவி தேவதைகள், இராஜ்யம் செய்தோம். பிறகு நாமே தான் தோல்வி அடைந்தோம். மீண்டும் நாம் வெற்றி அடைந்து கொண்டு இருக்கின்றோம். 5000 வருடத்தின் விஷயம் ஆகும். இங்கு ஒவ்வொருவரும் தனக்காக முயற்சி செய்கிறார்கள்.

யார் எவ்வளவு பேரை தனக்கு சமமாக மாற்றுகிறார்களோ அவர்களுக்கு பாபா பரிசும் அளிக்கின்றார். யோக அக்னியினால் உங்களுடைய பாவங்கள் தானாகவே அழிந்து போகும். நான் எதுவும் செய்வதில்லை என்று பாபா கூறுகின்றார். நீங்கள் உங்களுடைய முயற்சியினால் இராஜ்யத்தை அடைகிறீர்கள். இராஜா ஜனகரின் எடுத்துக் காட்டு இருக்கின்றது அல்லவா? இதற்கு சாட்சாத்காரம் என்று கூறப்படுகிறது.

நாம் ஜீவன் முக்தியில் செல்வதற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம். இதில் ஞானத்தின் அவசியம் இருக்கின்றது என உங்களுக்குத் தெரியும். நாம் முக்தியிலேயே இருந்து விடக்கூடாது. நம்முடையது ஆல்ரவுண்ட் பார்ட் ஆகும். நீங்கள் இரயிலில் வரும் பொழுது அகமதாபாத் வழியாக வருகிறீர்கள் அல்லவா? அதுபோன்று நாமும் முக்தி வழியாக ஜீவன் முக்திக்குப் போக வேண்டும். அடிக்கடி பரந்தாமத்தை நினையுங்கள். அந்த பள்ளிக் கூடங்களில் 5-6 மணி நேரம் படிக்கிறார்கள். இங்கே இவ்வளவு படிக்க முடியாது. ஆகையால் தான் ஒரு மணி நேரம், அரை மணி நேரம்...... எனப்படுகிறது. இதில் அமிர்தவேளை நல்லது. அமிர்தவேலையில் நீராடவும் செய்யப்படுகிறது. ஒரு முறை முரளியைக் கேட்டு விட்டு பிறகு இந்த கருத்துக்களை திரும்பத் திரும்ப கூறிக் கொண்டேயிருங்கள். டேப்பில் முரளி பதிவு செய்யப்படுகிறது. நீங்கள் பதினைந்து நாட்களுக்குப் பிறகு கேட்டாலும் கூட புத்துணர்வு அடைவீர்கள். ஏதாவது ஒரு கருத்து கவனத்தில் இல்லை என்றாலும் உடனே எண்ணத்தில் வரும். முரளியின் நோட்ஸ் தன்னிடம் வைத்துக் கொள்வது நல்லது. இது வெடி குண்டு அல்லவா? நிறைய குழந்தைகள் நோட்ஸ் வைக்கிறார்கள். வக்கீல், மருத்துவர்கள் கூட தங்களிடம் நிறைய புத்தகங்களை வைக்கிறார்கள். யார் நிறைய புத்தகங்களைப் படித்திருக் கிறார்களோ அவர்கள் நன்கு மருந்து கொடுப்பார்கள். சிலர் நன்கு நோட்ஸ் எடுக்கிறார்கள். சிலர் நோட்ஸ் கூட எடுப்பதில்லை. இது கூட உங்களுடைய கர்ம பந்தனம் என்று பாபா கூறுவார். அது கூட அவர்களின் விகர்மம் ஆகும். நம்முடைய இராஜ்யம் உருவாகிக் கொண்டு இருக்கின்றது என குழந்தைகளாகிய நீங்கள் அறிகிறீர்கள். முதலில் வியாபாரத்திற்காக ஆங்கிலேயர்கள் வந்தனர். ஆனால் வியாபாரம் செய்து கொண்டே நமக்குள் சண்டையிட்டுக் கொள்வதை பார்த்தனர். அப்படி என்றால் நாம் படைகளை உருவாக்கி ஏன் இராஜ்யத்தை அடையக்கூடாது என நினைத்தனர். உங்களுக்கு மிகவும் எளிதாகும். யாரையும் அடிக்க வேண்டிய விஷயம் இல்லை. நீங்கள் யோக பலத்தால் இராஜ்ய பாக்கியத்தை அடைகிறீர்கள். சத்யுகத்தில் லட்சுமி நாராயணருக்கு எங்கிருந்து இராஜ்யம் கிடைத்தது. கலியுகத்தின் இரவு முடிவடைந்து மீண்டும் சத்யுகத்தின் பகல் வரவேண்டும். பகலில் இராஜ்யம், இரவில் கேளிக்கை !

பாபா வந்ததும் நாம் பணக்காரன் ஆகிவிடுகிறோம். கலியுகத்திற்கு பிறகு சத்யுகம் ஆகும். பல தர்மங்களுக்குப் பிறகு ஒரு தர்மம். யார் போன கல்பத்தில் இராஜ்யத்தை அடைந்தனரோ அவர்களே இப்பொழுதும் அடைந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களுக்கு சொர்க்கத்தின் தெய்வீகமான இராஜ்யம் என்று கூறப்படுகிறது. இப்பொழுதோ நரகமாக இருக்கின்றது. மேலும் நிர்வாண தாமம் பிரம்மாண்டமாகும். அங்கே நீங்கள் முட்டை போன்று இருக்கின்றீர்கள். உங்களுடைய புத்தியில் முழு பிரம்மாண்டம் சிருஷ்டியின் ஞானம்

இருக்கின்றது. எவ்வளவு எளிதான விஷயம். முக்கியமானது கீதையின் விஷயமாகும். கீதையில் பகவானின் பெயரை மாற்றிவிட்டனர். இது ஞானத்தின் குண்டாகும். ஒரு விஷயத்தை யுக்தியோடு புரிய வையுங்கள். இச்சமயம் அனைவரும் புதைகுழியில் (சேறு) மாட்டிக் கொண்டு இருக்கின்றனர். பாபா வந்து புதைகுழியி-ருந்து எடுப்பதற்காக சாதனை செய்விக்கிறார். மாயை சிறகுகளை துண்டிக்கின்றது. பறக்க முடியவில்லை. இப்போது அனைவரும் தூய்மையாகி திரும்பிச் செல்ல வேண்டும்.

பாபாவிடமிருந்து மீண்டும் இராஜ்ய பாக்கியத்தை அடைவதற்காக நீங்கள் முயற்சி செய்து கொண்டு இருக்கின்றீர்கள். உங்களில் யார் நன்கு கடைபிடித்து தனக்கு சமமாக மாற்றுகிறார்களோ அவர்களுக்கு மிகவும் குஷியிருக்கும். முதல் நம்பரில் யார் தேர்ச்சி அடைகிறார்களோ அவர்களுக்கு மிகவும் குஷியிருக்கும் அல்லவா! அரசாங்கம் கூட ஸ்காலர்ஷிப் கொடுக்கின்றது. உங்களுடைய மாலை உருவாக்கப்பட்டு இருக்கிறது. 108ன் மாலை இருக்கிறது. 16108 ன் மாலை இருக்கிறது. ஒரு பெட்டியை செய்கிறார்கள். அதில் போட்டு விடுகிறார்கள். இந்த மாலை யாருடையது என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். ருத்திராட்ச மாலை என்று எதற்குக் கூறப்படுகிறது. முதலில் பிரம்மாவின் மாலை. பாபா படைப்புகளைப் படைத்துக் கொண்டு இருக்கிறார் அல்லவா? யார் பிரம்மாவின் மனதில் இடம் பிடிக்கிறார்களோ அவர்களே சிவபாபாவின் மனதில் இடம் பெறுவார்கள். இது பிரம்மாவின் மாலையாகும். அனைவரும் குழந்தைகள் அல்லவா! எனவே முதலில் அவருடைய மாலை பிறகு ருத்ர மாலை உருவாகும். பிறகு சென்று விஷ்ணுவின் கழுத்தில் சுழல்வார்கள். இந்த சொர்க்கத்தின் இராஜ்யம் இப்பொழுது உருவாகிக் கொண்டு இருக்கின்றது. சொர்க்கத்தில் இருக்கக் கூடியவர்கள் தான் நரகத்தில் வருகிறார்கள். பிறகு நாம் நரகத்தில் இருந்து சொர்க்கத்திற்குப் போகிறோம். மாயாவை வெற்றி அடைந்து உலகத்தை வென்றவர் ஆகிறோம். நாம் இந்த நடிப்பை பல முறை நடித்திருக்கிறோம் என நீங்கள் கூறுகிறீர்கள். நீங்கள் மட்டும் தான் சொர்க்கத்தைப் பார்ப்பீர்களா, நாங்கள் சொர்க்கத்தை பார்க்க முடியாதா என சிலர் கூறலாம். அனைவரும் அங்கே போக முடியாது என சொல்லுங்கள். முடியாது. ஒவ்வொருவரும் தன்னுடைய சதோ ரஜோ தமோவில் நடிப்பை நடிக்கிறார்கள். இது யாருக்கும் தெரியவில்லை. நம்முடைய இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டு இருக்கின்றது என நீங்கள் அறிகிறீர்கள். நாம் சொர்க்கத்திற்கு அதிபதியாகிக் கொண்டு இருக்கின்றோம். நாடகம் உங்களை நிச்சயமாக முயற்சி செய்ய வைக்கும். நாடகத்தில் இவர் மூலமாக முரளி நடத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றது. முயற்சி இல்லாமல் நீங்கள் இருக்க முடியாது. உட்கார முடியாது. போன கல்பத்தில் எப்படி முரளி நடந்ததோ அதே போன்று நாடகப்படி நடக்கும். எவ்வளவு ஆழமான விஷயங்கள், நாடகம் ரிப்பீட் ஆகும். நாமோ கவலையற்ற சக்கரவர்த்தி. பரம்பிதா பரமாத்மா சிவனின் பேரக் குழந்தைகள் ஆவோம். அவர்களுக்கு எதைப் பற்றிய கவலை இருக்கின்றது. இது இராஜயோகம் ஆகும். இப்போது பழைய கணக்கு வழக்குகளை முடித்து விடுங்கள். இதிலிருந்து புத்தியோகத்தை விலக்கி விடுங்கள் என்று பாபா கூறுகின்றார். பாபா கொடுக்கக்கூடியவர் ஆவார். உங்களிடம் எது இருக்கின்றதோ அதை அர்ப்பணித்து விடுங்கள் என பாபா கூறுகின்றார். இங்கே எந்த மாளிகையும் கட்ட வேண்டியது இல்லை. இந்த பணத்தினால் என்ன செய்ய வேண்டும். மூன்றடி நிலத்தை வாங்கி சென்டரை

திறந்து விடுகிறார்கள். இது முக்கியமான யுனிவர்சிட்டி மற்றும் மருத்துவமனையாகும். அந்த மருத்துவமனைகள் பல உள்ளன. இது ஒரே ஒரு மருத்துவமனை ஆகும். யார் தார்மீக சிந்தனை உடையவர்களாக இருக்கிறார்களோ அவர்கள், நாம் இது போன்ற மருத்துவமனைகளை நாம் ஏன் திறக்கக் கூடாது, இதன் மூலம் மனிதர்கள் சதா ஆரோக்கியமானவர் களாக ஆவார்கள் என கூறுகிறார்கள். பாபா ஆரோக்கியத்தையும் செல்வத்தையும் கொடுக்கிறார் என்றால், பாபா இது உங்களுடைய பொருள் எந்த காரியத்தில் வேண்டுமானாலும் பயன்படுத்துங்கள் என்று கூறுவார்கள். எனவே நிச்சயமுடையவராகி முழுமையாகப் பின்பற்ற வேண்டும். ஒவ்வொருவரும் தனது ஜாதியை முன்னேற்றுகிறார்கள் அல்லவா? நீங்கள் பிராமணர்கள் நாங்கள் என்கிறீர்கள். பிறகு அனைத்தையும் ஏன் டிரான்ஸ்பர் செய்வது இல்லை. பாபா 21 பிறவிகளுக்கு சக்கரவர்த்தி பதவியைக் கொடுக்கின்றார். பாபாவின் சேவையில் ஈடுபடுத்துவதால் நீங்கள் ஒரு போதும் பசியினால் இறக்க மாட்டீர்கள். நம்முடைய செலவு எதுவும் கிடையாது. நீங்கள் வயிற்றுக்காக 2 ரொட்டி சாப்பிடுகிறீர்கள், வேறு என்ன? மனிதர்களுக்கு நிறைய செலவாகிறது. கல்யாணம் - இறப்பு என எவ்வளவு செலவு செய்கிறார்கள். நமக்கு எந்த செலவும் இல்லை. சிவபாபா வுடன் உங்களுக்கு நிச்சயம் ஆகியிருக்கிறது. ஒரு பைசா கூட செலவில்லை. நிச்சயம் செய்து விட்டு நாம் பாபாவிடம் வந்து விடுகின்றோம். இங்கே கூட குழந்தைகளாகிய நீங்கள் சேவை செய்ய வேண்டும். நீங்கள் தங்களுடைய நினைவுச் சின்னத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைய வேண்டும். இது நம்முடைய பாபா மம்மாவின் நினைவுச் சின்னமாகும். மேலும் தேவி தேவதைகளாகிய நமது நினைவுச் சின்னம் இருக்கின்றது. முக்கியமான நினைவுச் சின்னங்கள் 5-7 இருக்கின்றது. முதன் முதல் முக்கியமானது சிவபாபாவின் நினைவுச் சின்னமாகும். அவர் ஒருவருக்குத் தான் பல பெயர்கள் உள்ளன. பிறகு சூட்சும வதனவாசி பிரம்மா, விஷ்ணு, சங்கரின் நினைவுச் சின்னங்கள், பிறகு மனித சிருஷ்டியில் சங்கம யுகத்தின் ஜகத்தம்பா, ஜகத்பிதா மற்றும் சக்திகள் ஆகிய நீங்கள், குழந்தைகள் மற்றும் சத்யுகத்தில் இலட்சுமி நாராயணன், அவ்வளவுதான். மற்ற படி பல்வேறு விதமான கோவில்கள் இருக் கின்றது. அதில் எவ்வளவு அலைய வேண்டியிருக்கிறது. நீங்கள் அனைத்து விஷயங்களி-ருந்தும் விடுபட்டு விட்டீர்கள். எவ்வளவு குஷியில் இருக்கின்றீர்கள். மனிதனிலிருந்து தேவைதையாகக் கூடிய எந்த பல்கலைக் கழகமும் இல்லை. உங்களுடையது இறை மாணவ வாழ்க்கையாகும். நீங்கள் தேர்ச்சி அடைந்து டிரான்ஸ்பர் ஆகிறீர்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அமிர்தவேளையில் முரளியை கேட்டு பிறகு கருத்துக்களை ரிப்பீட் செய்ய வேண்டும். முரளியினுடைய குறிப்பு நிச்சயம் எடுக்க வேண்டும். மகிழ்ச்சியில் இருக்க வேண்டும் என்றால், தனக்குச் சமமாக மாற்றக் கூடிய சேவை செய்ய வேண்டும்.

2. பிரம்மா பாபாவின் மனதில் இடம் பிடிக்க ஞான யோகத்தில் கூர்மை ஆக வேண்டும். நம்பர் ஒன்னில் தேர்ச்சி அடைந்து ஸ்காலர்ஷிப் (உதவித் தொகை) வாங்க வேண்டும்.

வரதானம் : டிராமாவில் பிரச்சனைகளை விளையாட்டு எனப்புரிந்து கொண்டு சரியாக நடிப்பை நடிக்கக் கூடிய ஹீரோ பார்ட்தாரி (கதாநாயகன்) ஆகுக.

யாருடைய எந்தவித நடிப்பும் சாதாரணமாக இல்லாமல் இருக்கிறதோ, ஒவ்வொரு நடிப்பும் துல்லியமாக இருக்கிறதோ, அவர்களை தான் ஹீரோ என்று சொல்லப்படுகிறது. எப்படிப்பட்ட பிரச்சனைகளாக இருந்தாலும், எப்படிப்பட்ட சூழ்நிலைகளாக இருந்தாலும் சரி, எதற்கும் அடிமை ஆகாமல் அதிகாரி ஆகி பிரச்சனைகளை விளையாடுவது போல கடந்து செல்ல வேண்டும். விளையாடுவதில் எப்பொழுதும் மகிழ்ச்சி இருக்கும், எப்படிப் பட்ட விளையாட்டாக இருந்தாலும் சரி, வெளியில் அழவேண்டிய நிலை இருந்தாலும் சரி, ஆனால் இவை அனைத்தும் எல்லைக்கு அப்பாற் பட்ட விளையாட்டு என்று உள்ளுக்குள் இருக்கும். விளையாட்டு எனப்புரிந்து கொள்வதினால் பெரிய பெரிய பிரச்சனைகளும் இலேசாக ஆகிவிடும்.

சுலோகன்: யார் சதா மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ,

அவர்கள் தான் பாராட்டுதலுக்கு உரியவர் ஆகிறார்கள்.